1981 ஜனவரி 31]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கடலுக்கடியில் டனல்போட்டு பாலம் கட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். அதே மாதிரி இராமேஸ்வரம் பாலத்தையும் கடலுக்கடியில் டனல் போட்டு விரைவில் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா? சென்னையிலும் கூட அத்தகைய பணியினை மேற்கொள்ளலாம், அதற்கும் முயற்சி எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பால வேலையை நிறுத்தியிருப்பது பற்றித்தான் கவன ஈர்ப்புத் தீர்மானம். நீங்கள் வேறு ஏதோ கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

(6) அறிக்கை அளித்தல்

3. பொதுக் கணக்குக் குழு.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''1974–75 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

(7) அரசினர் சட்டமுன்வடிவுகள்

அ. கால்நடை நோய்கள் (திருத்த) சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கின்றது.

8. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள்?

விவாதம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப் பெற்றுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின்